**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 411/2021**

**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதாபன் | தாலுகா | : | பாளையங்கோட்டை |
| தந்தை பெயர் | : | செல்லவடிவு | தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | வீ.எம்.சத்திரம் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 09th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் மனித உரிமை மற்றும் சமூகநீதி காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.07.2017ம் தேதி, செங்கோட்டை காவல் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது, புளியரை காவல்நிலைய குற்ற எண் 124/2015, சட்டப்பிரிவுகள் 3 and 4 of Indian Explosive Act வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டு, செயலிழக்கப்பட்டு இருந்த நிலையிலுள்ள நாட்டு வெடிகுண்டுகளின் பாகங்களை அன்றைய தினமே கனம் செங்கோட்டை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, பகுப்பாய்விற்காக சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜேஸ்வரன் அவர்கள் மூலம் அனுப்பி வைத்தேன். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பணிமாறுதலில் சென்று விட்டமையால், எனக்கு பிந்தைய ஆய்வாளர் திரு.சுரேஷ்குமார் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி திருநெல்வேலி முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru E.Esakkimuthu, Junior Assistant, முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.11 13:15:53 +0530